மேலும், நிலுவையில் உள்ள மீதமுள்ள வேலைகளையும் நிச்சயமாக முடிக்க இந்தத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. காளியப்பன் : மலைக்குக் கீழ்ப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புக்காரர்களை இந்து சமய அறநிலையத்துறை அகற்றி துறை சார்பாக கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : ஆக்கிரமிப்புக்காரர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அகற்றப்படுவார்கள்.

பேரையூர்-மேலப்பட்டி நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்

*2074 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், பேரையூரிலிருந்து மேலப்பட்டி கிராமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையை உடனே செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

எதிர்வரும் நிதியாண்டில் பராமரிப்பு நிதி நிலைமைக்கேற்ப இச்சாலையை மேம்பாடு செய்து நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரையை மையமாகக் கொண்டு ஹைவேஸ் சர்க்கிள்

*5928 திரு. எஸ். எஸ். தென்னரசு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையை மையமாகக் கொண்டு இராமநாதபுரம், பசும்பொன், மதுரை, காயிதேமில்லத் மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு ஹைவேஸ் சர்க்கிள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1990 ஏப்ரல் 16]

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம், மதுரை, தேவர் திருமகன், காயிதே மில்லத் போன்ற மாவட்டங்களை வைத்து, ஹைவேஸ் சர்க்கிள், மேற்பார்வைக் கோட்டம், அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மூலக் கேள்வியே திருப்பிக் கேட்கப்படுவதாக அமைச்சர் கருதுகிறார். விடையும் அதுவாகத்தான் இருக்கும்.

திரு. பி. என். வல்லரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையை மையமாக வைத்து ஹைவேஸ் சர்க்கிள் உருவாவதன் மூலம், தென் மாவட்ட மக்களுக்கு சிறப்பாக பணியாற்ற வாய்ப்புகள் ஏற்படும். இந்த சர்க்கிள் அமைவது சிறப்பானது, முக்கியமானது, ஆகவே அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே மதுரையை மையமாக வைத்து ஒரு ஹைவேஸ் சர்க்கிளை உருவாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் சில மாறுதல்களைச் செய்ய உத்தேசித்திருக்கிறோம். அது குறித்து ஆராய ஒரு குழுவை அரசு அமைத்து இருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் கவனிக்கப்படும்.

9–45 மணி

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, இந்த அலுவலகம் திருநெல்வேலியிலே இயங்குகிறது என்று நான் எண்ணுகிறேன். இங்கே பேசிய எல்லா கட்சிக்காரர்களுமே அது மதுரையிலே இயங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த அரசு தயவு செய்து அந்த அலுவலகம் மதுரையிலே இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டின் ரெகுலர் சர்க்கிள் திருநெல்வேலியில் இருக்கிறது. அதை மாற்றி ஆர். ஆர். ஐயும் ரெகுலரையும் ஒன்றாக இணைத்து அந்த சர்க்கிள்களை அதிகமாக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் முடிந்த முடிவாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்காகச் சொல்கிறேன். பழைய இராமநாதபுரத்தை உள்ளடக்கிய ஒரு சர்க்கிள் தனியாகவும் காயிதே மில்லத், மதுரை மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு சர்க்கிள் தனியாகவும், அதை மதுரையை மையமாகக் கொண்டும் மற்றதை இராமநாதபுரத்தை மைய

மாகக் கொண்டும் அமைக்கலாமா என்றும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. முடிந்த முடிவு எடுக்காத காரணத்தாலே தான் யோசனையிலே இருக்கிறது என்று தெரிவித்தேன். விரைவில், என்னுடைய மானியக் கோரிக்கையில் அதை முடித்து விடலாம் என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்தல்

*7965 திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உலக வங்கியின் உதவியுடன் தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : உலக வங்கி உதவியுடன் தேசிய நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன் அடிப்படையில் ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலை 45-ல் தாம்பரம் முதல் விழுப்புரம் வரையிலான சாலை உலக வங்கி உதவியுடன், அந்த சாலையைப் பலப்படுத்துகிற, அகலப்படுத்துகிற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியுடன் என்.எச். 45 திட்டம் தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை அமல்படுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார். அதில் எத்தனை பேக்கேஜுகள் போடப்பட்டிருக்கின்றன, யார் யார் மூலம் அந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, திட்டச் செலவு எவ்வளவு என்பதனையும், உலக வங்கி நிறுவனத்தைத் தவிர்த்து, வேறு உலக நிறுவனங்கள் ஏதேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்திருக்கின்றனவா, அப்படி எந்தெந்த நிறுவனங்கள், எவ்வளவு நிதி அளிக்க முன் வந்திருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலேயிருந்து விழுப்புரம் வரையிலே இருக்கிற தேசிய நெடுஞ்சாலை என். எச். 45-ஐ, விழுப்புரம் டூ தாம்பரம் வரையிலுள்ள அந்தப் பகுதியை அகலப்படுத்தவும்